……………..……………………………..பள்ளி - ……………………………

**இறை வணக்கம் :**

ஆதியந்தம் இல்லாத இறைவனே! உம்மைப் போற்றித் துதிக்கிறோம். எங்களையும் எங்கள் வீட்டாரையும் காத்து வழிநடத்திடும். எங்களின் ஆசிரியர், பெற்றோர், மற்றும் மூத்தோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ஒழுக்கத்தையும், வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திடும் நல்லறிவையும் எங்களுக்குத் தாரும்.

**தமிழ்த்தாய் வாழ்த்து :**

**கொடிப் பாடல் :**

| | |
|---|---|
| தாயின் மணிக்கொடி பாரீர் –அதைத்<br>தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்.<br>தாயின் மணிக்கொடி பாரீர்<br>ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்<br>உச்சியின் மேல் வந்தேமாதரம் என்றே<br>பாங்கின் எழுதித் திகழும் - செய்ய<br>பட்டொளி வீசிப் பரந்தது பாரீர் | தாயின் மணிக்கொடி பாரீர்!<br>கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் – எங்கும்<br>காணரும் வீரர் பெருந்திரக் கூட்டம்<br>நம்பற் குரியர் அவ்வீரர் – தங்கள்<br>நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்<br>தாயின் மணிக்கொடி பாரீர்! |

**உறுதி மொழி :**

இந்தியா என் தாய் நாடு. இந்தியர் அனைவரும் என் சகோதர சகோதரிகளே. எவரிடத்திலும் மதம், மொழி, பொருதாளாதாரம் மற்றும் சாதீயப் பாகுபாட்டுடன் பழகாது அன்புடன் நடந்துகொள்வேன் என்றும், நாட்டின் உரிமை வாழ்வையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்றும் உளமார நான் உறுதி கூறுகிறேன்.

மேலும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் பூசல்களுக்கும், அரசியல் - பொருளாதாரக் குறைபாடுகளுக்கும், ஒருபோதும் வன்முறையை நாடாது அரசியலமைப்பின் வழியில் நின்று தீர்வு காண்பேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

**குறளும் பொருளும் :**



**இன்றைய செய்திகள் :**

**பிறந்த நாள் வாழ்த்து :**

**ஆசிரியர் உரை :**

**நலமுடன் வாழ பத்துக் கட்டளைகள் :**

1. காலையிலும், இரவிலும் பல் துலக்கிடு
2. மலம் கழிக்க கழிப்பறையைப் பயன்படுத்திடு
3. கழிப்பிடம் சென்று வந்தபின் சோப்பினால் கைகளைக் கழுவிடு
4. சோப்புத் தேய்த்துத் தினமும் குளித்திடு
5. சுத்தமாகத் துவைத்த ஆடைகளையே அணிந்திடு
6. நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திடு
7. சாப்பிடும் முன் கைகளைச் சோப்பினால் கழுவிடு
8. மூடி வைக்கப்பட்ட சுத்தமான உணவையே சாப்பிடு
9. காலணி அணிந்து வெளியே சென்றிடு
10. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திடு

**சுகாதார உறுதிமொழி :**

நான் எனது வீடு, பள்ளி மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வேன். இயற்கையைப் பாதுகாப்பேன். நெகிழிப் பொருட்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன். தேங்காய் ஓடு, நெகிழிப்பை மற்றும் தெருக்களில் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்வேன். வீடு மற்றும் பள்ளியில், நீரைச் சேமிக்கும் பாத்திரங்களை மூடிவைப்பேன். டெங்கு மற்றும் சிக்-குன்-குன்யா நோய்கள் பரவுவதைத் தடுக்கும் முறைகள் குறித்து, எனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்கும் சொல்லுவேன். நெகிழிப் புட்டிகளிலும் பைகளிலும் அடைத்து விற்கப்படும் பொருட்கள் மற்றும் குளிர் பானங்களைத் தவிர்த்து இயற்கை உணவுகளையே உண்பேன் என உறுதியளிக்கிறேன்.

**வாசிப்போம் வகுப்பறையில்! :**